2013 ஏப்ரல் 5]

தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்ற பொற்கால ஆட்சியிலேதான் செய்யப்பட்டுள்ளது. பிணியாளர்கள் அத்தனியார் மருத்துவமனைக்கும் அனுப்பப்படுகின்றார்கள். அதுமட்டுமின்றி, சிறப்புப் பரிசோதனைக்கென சென்னையிலுள்ள அயனாவரம் மருத்துவமனைக்கும் மாதத்தில் 30 முதல் 40 வரை பிணியாளர்கள் அனுப்பப்படுகின்றார்கள். இதற்கான போக்குவரத்துச் செலவு மற்றும் முழுச் செலவையும் மாநில அரசே ஏற்றுக்கொள்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களுடைய நலன் கருதி மாண்புமிகு அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்ற பதிலை வழங்கிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும் தொழிலாளர்களின் தோழன் சார்பிலே என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 162, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

162—

மாணவர் விடுதி

***25012—திரு. டி.ஆர்.பி. ராஜா:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீடாமங்கலத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவர் விடுதி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தின் பொற்கால முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டாம் முறை முதல்வராக பதவியேற்றிருந்த காலத்திலேயே 28-7-2005 இலேயே திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலத்தில் இயங்கி வரும் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதிக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஆணையிட்டு, அதற்காக 31 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கி இருந்தார்கள். அதன்பிறகு, 2006 இல் ஆட்சிப் பொறுப்பேற்ற மைனாரிட்டி தி.மு.க. அரசு, அந்த விடுதிக்காக எந்தப் பணியையும் செய்யவில்லை. மீண்டும், இப்பொழுது பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் துறையின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக பதவியேற்றவுடன் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் அனைத்து விடுதிகளும் சூரிய ஒளி மின்சாரத்துடனும், சூரிய ஒளிமூலம் தண்ணீர் சூடேற்றும் கருவிகளும் பொருத்தப்பட்டு, சொந்தக் கட்டடத்தில்தான் இயங்க வேண்டுமென ஆணையிட்டார்கள். அதன்படி, இன்றுள்ள 1,294 விடுதிகளில் 1,000 விடுதிகள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-55

மேலும், 226 விடுதிகளுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் அடிப்படையில் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் பள்ளி மாணவர் விடுதிக்குக் கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் முன்பு ஒதுக்கியிருந்த ரூபாய் 31 இலட்சத்து 50 ஆயிரம் நிதியை, ரூபாய் 59 இலட்சமாக உயர்த்தி வழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) 12-3-2013 அன்று ஆணையிட்டு, வாழும் வள்ளலாகத்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2013 ஏப்ரல் 5]

திகழ்கின்றார்கள். ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்தவுடன் விரைவில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நீடாமங்கலம் பேரூராட்சியில் நீண்ட நாட்களாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர்களுக்கான விடுதிக்குச் சொந்தக் கட்டடம் வேண்டும் என்ற மக்களின் கோரிக்கையை ஏற்று, தமிழகத்தின் ஒப்பற்ற தலைவர், தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில், 2010 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அதற்கான நிருவாக அனுமதி பெறுவதற்கான அனைத்து வேலைகளும் துரிதப்படுத்தப்பட்டு, பிப்ரவரி 2011 ஆம் ஆண்டு 44 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் அதற்குத் திருத்திய மதிப்பீடு பெறப்பட்டு, அனுமதி வழங்கும் நிலையில் அதற்கு சரியான இடம் இல்லாத காரணத்தினால் பிற்படுத்தப்பட்டோர் (குறுக்கீடு) கொஞ்சம் அமைதியாக இருங்கள் நான் சொல்வதைக் கேட்டுக்கொண்டு பிறகு பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) முழுமையாகக் கேட்டுவிட்டு பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, துணைக் கேள்வி கேளுங்கள். (குறுக்கீடு) கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. டி.ஆர்.பி. ராஜா: கேள்விக்கு வருகிறேன். இடம் தேர்வு செய்வதில் சிக்கல் ஏற்பட்டது. ஆகையால் பிற்படுத்தப்பட்டோருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் இடத்தில் எஞ்சியிருந்த இடத்தைத் தேர்வு செய்து, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான விடுதி கட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டது. இந்த நிலையில் தேர்தல் அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் அரசு இக்கட்டடம் கட்டும் பொறுப்பை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, சுருக்கமாக துணைக் கேள்வி ஒன்றைக் கேளுங்கள். நீங்கள், உங்கள் விருப்பத்திற்குப் படிக்காதீர்கள்.

[2013 ஏப்ரல் 5

திரு. டி.ஆர்.பி. ராஜா: அரசுக் கட்டடம் கட்டும் பொறுப்பை பொதுப் பணித் துறையிடம் சென்ற வருடம் அளித்துள்ளதாகத் தகவல்கள் வருகின்றன. இதற்கு 59 இலட்சம் ரூபாய்க்கு மீண்டும் திருத்திய மதிப்பீடு பெறப்பட்டுள்ளது என்று கூறுகிறார்கள். ஆகவே, அரசு மேலும் காலம் தாழ்த்தாமல் இந்தக் கட்டடத்தை விரைவாகக் கட்டித் தருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் 2-வது முறையாக முதலமைச்சராகப் பதவி ஏற்றவுடன் 2005-லேயே இதற்காக 31 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியிருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிக்கான சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான இடம் பிரச்சினையாக இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்களால்தான் 2011-ல் அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர்கள் விடுதி கட்ட நிலம் ஒதுக்கி ஆணையிட்டுள்ளார்கள். அதுமட்டுமல்லாமல், 'மக்களுக்காகத்தான் திட்டங்கள், திட்டங்களுக்காக மக்கள் அல்ல' என்ற பொன்மொழிகளை உதிர்த்து மாண்புமிகு அம்மா அவர்கள் இப்போது 59 இலட்சம் ரூபாய் ஒதுக்கித் தந்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த விடுதியில் 75 மாணவர்கள் படிக்கின்றார்கள், 75 மாணவர்கள் தங்கியிருக்கின்றார்கள். ஆக, அந்த விடுதியைக் கட்டுவதற்கான மிகப் பெரிய தொகை ரூ.59 இலட்சத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2006 முதல் 2011 வரை கடந்த 5 ஆண்டுகளாக அந்த விடுதிக்கு எந்தப் பணிகளுமே நடைபெறவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) 2005 இல்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் நிதியை ஒதுக்கினார்கள். 2011 இல் மாண்புமிகு அம்மா அவர்கள் இடத்தை ஒதுக்கினார்கள். மீண்டும் இப்பொழுது ரூ.59 இலட்சம் ஒதுக்கியுள்ளார்கள். ஆனால், 2006-2011 வரை ஒன்றுமே செய்யாமல், இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைக் கேட்டால் ஆச்சரியமாக இருக்கிறது. வியப்பாகவும் உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

2013 ஏப்ரல் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, இன்னும் என்ன கேட்க வேண்டும்? அவர்தான் கட்டுகிறேன் என்று சொல்கிறார்கள் அல்லவா? இன்னும் என்ன? (குறுக்கீடு) திரு. டி.ஆர்.பி. ராஜா.

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005 முதல் 2006 வரை அ.தி.மு.க. ஆட்சிதான் நடந்தது. அப்போதுகூட நீங்கள் அதைச் செய்திருக்கலாம். ஆக, அப்போது ரூ.33 இலட்சமாக இருந்தது, ரூ.44 இலட்சமாகிவிட்டது. இப்பொழுது ரூ.59 இலட்சமாக ஆகிவிட்டது. எங்களுக்குத் தேவை எந்த ஆட்சியில் கட்டினாலும் எங்களுக்குக் கட்டடம் தேவை. சீக்கிரமாகக் கட்டித் தரவேண்டும் அவ்வளவுதான்.

இதேபோல, மன்னார்குடி ராஜகோபாலசாமி கல்லூரியைச் சார்ந்திருக்கும் பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவர்களுக்கான விடுதியில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 60 ஆக உள்ளது. ஆனால் அங்கே தேவை 150-க்கும் மேலாக உள்ளது. அதேபோல் பள்ளி மாணவர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 65 ஆக உள்ளது. ஆனால் அங்கேயும் 150-க்கும் மேற்பட்ட மாணவர்கள் இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, கேள்வியைக் கேட்காமல் வேறு எங்கேயோ போகிறீர்கள். திரு. ராஜா, கேள்வி கேட்பதானால் கேளுங்கள், இல்லையென்றால் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் வேறு எங்கேயோ போகிறீர்கள். மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாமல் கேள்வி கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள்.

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே, இந்த அரசு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ராஜா, இதுகுறித்து தனிக் கேள்வி போடவும்.

முற்பகல் 11-00

பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா வரிசை எண் 163, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.